# பெருவிழா அழைப்பிதழ் - 2026



**செப்டம்பர்**
**6 முதல் 8 வரை**

**அனைவரும் வருக!**
**இறை ஆசீர் பெறுக!!**

## குமரியின் வேளாங்கண்ணி

கேட்ட வரம் தரும்

## புனித ஆரோக்கிய அன்னை திருத்தலம், தூத்தூர்

கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு - 629 176





*குமரியின் தாயே! ஆரோக்கிய அன்னையே!*
*துயரங்கள் தீர்க்கும் துணையாய் நிற்பவளே!*
*கடலோர மக்களின் காவல் அரணே!*
*கண்ணீரைத் துடைக்கும் கருணைக்கடலே!*
*நோயுற்ற உள்ளங்களுக்கு நலம் அருளும் அன்னையே!*
*நம்பிக்கை இழந்தோருக்கு நம்பிக்கை ஒளியே!*
*குடும்பங்கள் காக்கும் குலவிளக்கே!*
*குழந்தைகள் வாழ்வின் அருள் நிழலே!*
*தூத்தூர் மண்ணில் அருள் பொழியும் அன்னையே!*
*ஆரோக்கிய அன்னையே வாழ்க! வாழ்க! என்றென்றும் வாழ்க!!*



அன்பு நிறைந்த நெஞ்சங்களே!
அனைவருக்கும் பெருவிழா நல்வாழ்த்துகள்!

முக்கடலும் முத்தமிடும் குமரி மாவட்டத்தின் கடற்கரை முன்மாதிரி கிராமமே தூத்தூர். குறிப்பாக ஆழ்கடல் மீன் பிடிப்பதில் உலக அளவில் புகழ்பெற்றவர்கள் வாழும் ஊர் இது. மேலும் தமிழகத்தின் கால்பந்தாட்ட கிராமம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கு இயேசு கிறிஸ்துவின் பன்னிரு சீடர்களில் ஒருவரான **புனித தோமையாருக்கு** ஆலயம் கட்டப்பட்டுள்ளது. இதுவே திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டத்தின், **தூத்தூர் மறைவட்ட முதன்மை ஆலயமும்** ஆகும். மேலும், இந்தியாவில் இயேசுவின் இரண்டாவது சீடர் என பெருமையாக அழைக்கப்படுகின்ற **புனித பிரான்சிஸ் சவேரியாரின்** புனித பாதங்கள் கி.பி. 1544-ல் பதிந்த புண்ணிய பூமி என்ற வரலாற்றுப் பெருமையும் இதற்கு உண்டு.



இத்திருவிழா, ஆரோக்கிய அன்னையின் ஆசிருடனும் பேராயர் **மேதகு. தோமஸ் ஜெ. நேற்றோ**, துணை ஆயர் **மேதகு. கிறிஸ்துதாஸ்** மற்றும் மேனாள் பேராயர் **மேதகு. சூசை பாக்கியம்** அவர்களின் நல்லாதரவுடனும் வெகுச் சிறப்பாய் நடைபெறுகிறது. இவ்விழாவினை, மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் மகிழ்வோடு கொண்டாடி வருகிறோம். மேலும் அனைவரும் ஒன்றாய் **நல்லிணக்க விருந்து** உண்பது தனிச்சிறப்பு.

கத்தோலிக்க திருஅவை, புனித பிரான்சிஸ் அசிசியின் நிலை வாழ்வின் 800-ஆம் ஆண்டு நினைவை கொண்டாடுகிறது. அவர் வாழ்வியலாய் "எல்லாம் கடவுளில், கடவுளில் எல்லாம்" என ஏற்று ஏழைகளை அன்பு செய்தல், இயற்கையை பாதுகாத்தல் மற்றும் அமைதியின் தூதனாகவே வாழ்ந்து உலகிற்கு அமைதியை வலியுறுத்தினார். புனிதரின் உன்னத போதனையை நாமும் ஏற்று வாழ உறுதிக்கொள்வோம், உன்னதத்தாயின் பரிந்துரையால் நலம் பல பெற்று, சாட்சிகளாய் அலை அலையாய் இத்திருத்தலம் நாடிவரும் இறை மக்களுடன் நாளும் நடந்த நல்லவைகளுக்கும், அற்புதங்களுக்கும் நன்றி சொல்லவும், இனி எல்லாம் நலமாய் அமையவும் வரம் வேண்டுவோம். இறையாசீர் நம்மில் ஊற்றெடுக்க அன்னையின் பிறப்பு விழாவில் பங்கு பெற அனைவரையும் அகமகிழ்வோடு அழைக்கிறோம்.

*இருளகற்றி ஒளி வீசுங்கள்!!* இனிதே அழைக்கும்... *வாழுங்கள் அன்னையின் வழியில்!!!*

அருட்பணி. M. **சூசை ஆன்றணி**, CMF பங்குத்தந்தை,

அருட்பணி. T. **பிரியன்**, CMF உதவிப் பங்குத்தந்தை,

**அருட்பணியிலும் அர்ப்பண வாழ்விலும் மண்ணின் மைந்தர்கள், இருபால் துறவிகள்**
**SJB அருட்சகோதரிகள், பங்குப் பேரவை, பங்கு நிதிக்குழு, பங்கு மக்கள், இருபால் பக்த சபையினர்,**
**தூத்தூர் மறைவட்டார மக்கள், விழாகுழுவினர்.**



உதவிக்கு : 9489176498, 9488154288, 9487127114, 9442987741, 8300789556, 9500736615, 9943285192, 8300102414, 8667615255, 8838375235. திருவழிபாட்டு நிகழ்வுகளை இணையம் மற்றும் நேரடி ஒளிப்பரப்பில் காணலாம்.

நேரடி ஒளிபரப்பில் www.thoothoor.com

NILA TV

http://www.facebook.com/ThoothoorCOM

Nila TV







## 06. 09. 2026 ஞாயிற்றுக்கிழமை

மாலை 5:00 மணி : செபமாலை

மாலை 6:00 மணி : **திருக்கொடியேற்றம்**

தலைமை : அருட்பணி. **சூசை ஆன்றணி**, கி. ச., பங்குத்தந்தை, தூத்தூர்.

திருப்பலித் தலைமை : அருட்பணி. **S. M. இருதயராஜ்**, பங்குத்தந்தை, புனித வியாகுல மாதா திருத்தலம், அரசடிப்பட்டி, தஞ்சை மறைமாவட்டம்.

மறையுரை : அருட்பணி. **து. திமோத்தி**, க. ச., பேராசிரியர், கப்புச்சின் இறையியல் கல்லூரி, சமயபுரம், திருச்சி.

## 07. 09. 2026 திங்கட்கிழமை

காலை 9:00 மணி : **முதல் திருவிருந்து திருப்பலி**

குறிப்பு: கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்கு பெறுவதுடன் தங்கள் பங்குதந்தையின் உரிய கடிதம் பெற்று வரவும்.

திருப்பலித் தலைமை : அருட்பணி. **சகாய தாசன்**, செ. தா., அதிபர், புஷ்பவனம் ஆசிரமம், மணப்பாறை, திருச்சி.

மறையுரை : அருட்பணி. **பிமேஷ்**, உதவி பங்குத்தந்தை, மாம்பள்ளி, திருவனந்தபுரம் உயர் மறைமாவட்டம்.



காலை 11:30 மணி :

தூத்தூர் அரசு மருத்துவமனையுடன் இணைந்து வழங்கும்
**காசநோய் நோயாளிகளுக்கு**
**ஊட்டச்சத்து உணவுத் தொகுப்பு வழங்குதல்**
குறிப்பு: சாதி மத பேதமின்றி அனைவரும் பயன் பெறலாம்.

மாலை 5:00 மணி : செபமாலை

மாலை 6:00 மணி : **நற்கருணை மாலை ஆராதனை**

தலைமை : அருட்பணி. **ஜெகன். சா**, பங்குத்தந்தை, காணிக்கை மாதா ஆலயம், குளச்சல். கோட்டாறு மறைமாவட்டம்.

மறையுரை : அருட்பணி. **A. இராபின்**, ஆயர் இல்லம், பாளையம்கோட்டை மறைமாவட்டம்.

இரவு 8:00 மணி : **தேர்ப்பவனி**

## 08. 09. 2026 செவ்வாய்க்கிழமை

காலை 9:00 மணி : **திருமுழுக்கு**

குறிப்பு: கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மட்டுமே பங்கு பெறுவதுடன் தங்கள் பங்குதந்தையின் உரிய கடிதம் பெற்று வரவும்.

தலைமை : அருட்பணி. **T. பிரியன்**, கி. ச., உதவிப் பங்குத்தந்தை, தூத்தூர்.

மாலை 5:00 மணி : செபமாலை

மாலை 6:00 மணி : **பெருவிழா கூட்டுத்திருப்பலி**

திருப்பலித் தலைமை : மேதகு மேனாள் ஆயர் **F. அந்தோனிசாமி**, கும்பகோணம் மறைமாவட்டம்.



இரவு 8:00 மணி : **நல்லிணக்க விருந்து**



## 09. 09. 2026 புதன்கிழமை

மாலை 5:00 மணி : செபமாலை

மாலை 6:00 மணி : **திருக்கொடியிறக்கம்**

திருப்பலித் தலைமை : அருட்பணி. **சூசை ஆன்றணி**, கி. ச., பங்குத்தந்தை, தூத்தூர்.

செபமாலை சிறப்பிப்போர் : திருவனந்தபுரம் மற்றும் கோட்டாறு மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலிருந்து வேளாங்கண்ணி திருத்தல நடைபயணம் செல்லும் பக்தர்கள், இளைஞர்கள், தூத்தூர் மறைவட்டார இறைமக்கள்.

குறிப்பு : மாலை நேர திருவழிபாட்டு நிகழ்வுகள் 7 மற்றும் 8 தேதிகளில் தூத்தூர் அரசு மருத்துவமனை மைதானத்தில் வைத்து நடைபெறும்.

"எல்லாம் கடவுளில், கடவுளில் எல்லாம்"



புனித திருமுழுக்கு யோவான்
பங்கு – பூத்துறை



அமைதியின் தூதன்
புனித பிரான்சிஸ் அசிசி



புனித யூதா ததேயூஸ்
பங்கு – சின்னத்துறை



புனித வியாகுல அன்னை
பங்கு – மார்த்தாண்டன்துறை



புனித நிக்கோலாஸ்
பங்கு – நீரோடி





புனித லூசியாள்
பங்கு – இரையுமன்துறை





புனித மரியன்னை
பங்கு – வள்ளவிளை



புனித கேத்ரினாள்
பங்கு – இரவிபுத்தன்துறை

திருவனந்தபுரம் உயர்மறைமாவட்டம்,
**புனித தோமையார் மறைவட்டார முதன்மை ஆலயம்,**
தூத்தூர், கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு – 629 176

www.thoothoor.com
*Designed by George, Thoothoor. 6382428178*